
# நாக தீபம்







அமரர்

திரு. பசுபதி நாகலிங்கம்

28 - 03 - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்




நெடுந்தீவு, நடுக்குறிச்சி – 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
இல, 177 சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி சந்தையடியை
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் பசுபதி நாகலிங்கம்


அவர்களின் இறைபதப் பேறு குறித்த

# "நாக தீபம்"

## 28.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### திதி வெண்பா

நாகலிங்கம் என்றொரு பண்பாளன் பிறந்திங்கே
சாலச் சிறந்ததெல்லாம் சரிவரவே ஆற்றிவிட்டு
ஞாலத்து [illegible] அடைந்த செம்மல்
பங்குனித்திங்கள் அமாவாசைத் திதியாம் என்றே ஜதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

## தேவாரம்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னை மறந்தறியேன்
உன்னாமம் யென்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளூறுசூலை தவிர்த்தருள்வாய்
அலங்கே னடியே ளதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றயே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன யோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும்உலகும் கழறஉழறி
உமைமண வாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினியாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே!

## வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பசுபதி நாகலிங்கம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் ஈழவளத் திருநாட்டின் வடக்கே சப்த தீவுகளில் ஒன்றான வளங்கொழிக்கும் பசுமை நிறைந்த நெடுந்தீவு மத்தியில் பசுபதி - அமராவதி தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக 1935.09.05 அன்று வந்துதித்தார்.

இவர் தனது பெற்றோரான பசுபதி அமராவதி அவர்களுடனும் தனது உடன் பிறப்புக்களான கோமளம், பார்வதி, நாகமுத்து, வேலாயுதம், சின்னம்மா என்பவர்களுடன் இனிதே கழித்திருந்த போது, இவர் தனது

ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு செல்லம்மா வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை நெடுந்தீவு யூனியர்ஸ் வித்தியாலயத்திலும் நிறைவு செய்தார். இவ்வேளையில் உற்ற வாலிபப் பருவம் அடைந்ததும் வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்காக தொழில்துறையில் விவசாயத்திலும் ஈடுபட்டார். இதன் நிமித்தம் அன்றைய அரசினால் வழங்கப்பட்ட படித்த வாலிபர் திட்டத்தினுள் அமரர் நாகலிங்கம் அவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இதன் பிரகாரம் இவர் கிளிநொச்சியிலுள்ள வட்டக்கச்சி என்னும் ஊரில் விவசாய நிலமும் குடிமனையும் அமையப் பெற்றார்.

அங்கிருந்து சிறப்பாக தனது வேளாண்மையை மேற்கொண்டு வரும் காலத்தில் கதிரவேலு நாகமுத்து தம்பதியின் ஐந்தாவது செல்வியாம் தவமணி என்பவரைக் கண்டு அவர்பால் கொண்ட காதல் இனிய பந்தமாம் திருமணத்தில் நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை சிறப்புறும் என்ற வள்ளுவன் கூற்றிற்கிணங்க சிறப்பாக பார்போற்றும் வகையில் வாழ்ந்து வந்தார். இந்த இல்லற வாழ்வின் சின்னமாக சுஜிகலா, ஜீவானந்தராஜா, ஜெயகலா, சிவகலா என்ற நான்கு முத்துக்களையும் இந்நித்திலத்தில் நடமாட விட்டு இன்புற்று இருந்த வேளை இறைவன் என்ன நினைத் தானோ!

தீராத நோய் ஒன்று வந்து வாழ்க்கைத் துணையை வாட்டி வதைத்ததால் மனமுடைந்து போனாலும், துணைவியைத் தன் கண் போல் பராமரித்து வந்த போதிலும் காலன் தனது கணக்கை முடிக்க எண்ணியதால் தனது வாழ்க்கைத் துணையை இழந்தார்.

இருந்த போதும் அவரது அன்பையும் சேர்த்து பிஞ்சுப் பாலகராய் இருந்த தாம் பெற்ற முத்துக்களை அரவணைத்து, உணவூட்டி, பராமரித்து, கல்விபுகட்டி, பார்போற்றும் உத்தமராய் உயரவைத்து அவர்களின் சிறப்பினைக் கண்டு அகமகிழ்ந்து வாழ்ந்து வந்ததன் சிறப்பாக

சிவகுமார் (ராசன்) என்ற மருமகனையும்,
பிரேமராணி (பிரேமா) என்ற ஒரே மருமகளையும்,
மரியதாஸ் (துரை),
ஸ்ரீகாந்த் (ஸ்ரீ) என்ற மருமகன்களையும் அடையப்பெற்று புளகாங்கிதம் அடைந்தார்.

இவர் தனது பேரப்பிள்ளைகளுடன் மட்டுமன்றி பூட்டப்பிள்ளை களுடனும் இன்புற்று வட்டக்கச்சியில் வாழ்ந்தார்.

இவர்களுள் சுஜீகலா சிவகுமார் (ராசன் / சுவிஸ்லும், ஜீவானந்த ராசா பிரேமராணி கனடாவிலும், சிறிகாந்த் சிவகலா லண்டனிலும் வாழ்ந்ததால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சியிலுள்ள மரியதாஸ் ஜெயகலா என்பவருடன்தான் தனது வாழ்க்கைக் காலத்தை கழித்தார்.

புன்சிரிப்புடனும், நகைச்சுவைப் பேச்சுடனும், நிமிர்ந்த நன்னடையுடனும், அரவணைக்கும் பாசத்துடனும் இருந்த அவரைப் பற்றிய நோய் காரணமாக மிகக் குறுகிய இரு வார காலத்துள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பிள்ளைகளைப் பார்த்து, கதைத்து சிரித்தவாறே 26.02.2017 அன்று அவரது இறுதி மூச்சு அடங்கி அமைதியடைந்தார்.

எல்லோர் மனங்களும் நிலைகுலைய தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய், பாசமுள்ள பேரனாய், பூட்டனாய் இருந்தவரின் இழப்புத் தாங்காமல் பிள்ளைகள் கண்ணீர் சொரிந்து கதற மண்ணுலகு விட்டு விண்ணுலகு எய்தினார்.

அவரது ஆத்மா அமைதியடையட்டும்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

உயிரில் கலந்த என் தந்தையே
உமது நினைவலைகள் என் நெஞ்சம் விட்டு
இன்னும் அகலவில்லை.
எமக்கு தாயும் தந்தையுமாயிருந்த தாயுமானவரே
நீங்கள் எங்கு சென்றீர்கள் ஐயா?
உங்களை பார்க்க நான் ஆசை ஆசையாகப்
புறப்படும் போது நீங்கள் விண்ணுலகம்
சென்ற செய்தி கேட்டு அந்த ஒரு கணம்
என் இதயமே நின்று விட்டது ஐயா!
உங்கள் கம்பீர நடையும்
உங்கள் புன்சிரிப்பும் எங்கே
தாம்பூலம் தரித்த உதடு ஐயா
உங்களின் அழகு வதனம் ஐயா
எங்களுக்கு பாசம் காட்டி
நேசம் வளர்த்த ஐயா
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் ஐயா
ஒவ்வோர் ஞாயிற்றுக் கிழமையும்
உங்களுடன் தொலைபேசியில் அளவளாவி
மகிழ்வேனே ஐயா
இன்று தொலைபேசி இருக்கிறது ஞாயிற்றுக்கிழமையும்
வருகின்றது ஆனால்?
நீங்கள் இன்று இல்லையே
ஐயா பாசம் என்றால் என்ன
என்று உங்களுடன் இருந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொண்டேன் ஐயா
என் பிள்ளைகளுக்கு பேரனாக
என் கணவருக்கு தாய்மாமனாக
எம் மேல் அளவு கடந்த பாசம் காட்டி
நேசம் வளர்த்தீர்கள் ஐயா
உங்கள் பிரிவை தாங்க முடியாமல்
வாய்விட்டு கதறி அழுகிறோம் ஐயா
எம் விழிநீர் துடைக்க வருவீர்களா ஐயா
ஐயா சோகம் தொடர்கிறது
ஐயா எங்கள் அம்மாவிடம் சென்றீர்களா ஐயா
நீங்கள் எத்தனை உறவுகள் இருந்தாலும்
தோள் சாய நீங்கள் இல்லையே ஐயா
உம் நினைவில் நாம் இங்கு தவித்து நிற்க
நித்தியமாய் உறங்குகின்றீர்
நினைவெல்லாம் மறந்து உம் கண்களில்
நாம் கண்ணீரை கண்டதில்லை புன்னகைக்கோ
உம் முகத்தில் குறையுமில்லை என் நாளும்
உம் நினைவில் வாழுகின்றோம்
நாம் கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம் ஐயா
இறைவனை வேண்டுகின்றோம் ஐயா

மகள் - கலா,
மருமகன் - ராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான ஐயா பிரிவெனும் துயரில்.....!

வைத்தியசாலையில் கண்டு
வருந்தி, கதறி அழுது நின்றோம்!

மறுநாள் உமைப்பார்த்து - சற்று நிம்மதி கொண்டோம்!
நிலைத்ததா! அந்த நிம்மதி எங்களுக்கு!

பாழாய்ப் போன நாளைத் தானே
ஏனோ அளித்தாய் - இறைவா எனக்கு!

ஆளுக்கொரு நேர்த்திகள் வைத்தோம்!
இறைவா உன்னிடம் இறைஞ்சிக் கேட்டோம்
கொஞ்சமாவது மிச்சம் வையென்று
ஏனோ எங்களை வஞ்சித்து விட்டாய்!
வைத்தியம் இங்கு பலனளிக்காது போக யாவரும்
பைத்தியம் ஆனோமே!

மெழுகு வர்த்தியாய் மற்றவர்களுக்கு சுடர் கொடுத்து
உருகியே நின்றீர்கள் - அமைதியாகவே!
உம்பணி உதவும் பணி செய்தீர்கள்.

என்றும் போல் உங்கள் ஆசிகளை
எமக்கு வழங்கும் - ஐயா!
உங்கள் புன்னகை சொன்னது ஆயிரம் வார்த்தைகள்!
நாம் யாவரும் - உங்கள் சாந்தி வேண்டி பிரார்த்திப்போம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மகன் – ராஜா,**

**மருமகள் – பிறேமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு வார்த்தை சொல்லாமல் சென்றதேன்?

அன்புள்ள ஐயாவே!
ஜெயா என்று மனம் நிறைய தரணி
எங்கும் ஒலிக்க அழைத்தீர்கள் - அவை
இன்னும் என் காதுகளில் சங்கீதமாய்
கேட்கிறதே ஐயா!

இத்தனை பேர் உறவுகள் இருக்க
இறுதியில் ஒரு வார்த்தை சொல்லாமல் சென்றதேன்?

எண்ணாத எண்ணமெலாம் எண்ணினேன்.
என் ஐயா எழும்புவார் என்று

வந்த நோய் குணமாகாதா என்று
வாடி நின்றோம் ஐயா!
மூடிய விழி மலந்திட மறுத்தாலும்
எங்கள் மூச்சினில் நிறைந்திருப்பாய்.

வருத்தமென்று ஆறுமுன்பே
மரணமென்ற இடி விழுந்தது
சரிந்ததுவோ உமது உடல்
தவிக்கிறோம் நாங்கள் இங்கே

பாசத்தை பயிராக்கி நேசத்தை
உறவாக்கி நேர்மையுடன் வாழ்ந்த
எங்கள் உறவே
காற்றுடன் கலந்து வந்ததோ
செய்தி ஒன்று
இடியோசை கேட்ட நாகமாய்
ஆனோம் ஐயா!

மகள் - ஜெயா,

மருமகன் - துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்திற்கு என் தாயுமானவரே

ஈரைந்து மாதங்கள்
சுமந்து ஈன்று எம்மை
வளர்த்தவர் எம் அன்னை, ஆனால்
அன்னையின் பிரிவிற்கு பின்
சுமையென்று எண்ணாமல்
பாசத்திற்கு குறைவில்லை
பார்ப்பதிலும் வேறுபாடில்லை
ஊண் உறக்கம் மறந்து
எம்மை உயிரைப் போல் காத்தவர்
எம் தந்தை
பேணி வளர்த்திட்ட எம்மில் பேரின்பம்
அடைந்த தந்தையே
உன் பாசத்துக்கு ஈடு இணையேது.
ஆண்டவன் கூட மண்டியிடுவான்
உன் பாசத்திற்கு என் தாயுமானவரே
என் உயர்விற்கு ஏணியும் நீரே
இனி எப்பிறவியில் காண்பேனோ.
என் அருமைத் தந்தையே
எப்பொழுதும் உன் மொழியில் – மகளே
என் காதினை குளிர்த்தாலும் என்
ஏக்கம் உமதருகாமைக்கு என்றும்
உங்கள் நினைவுடன் தவிக்கின்றேன்.
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மகள்
செல்வி ஸ்ரீகாந்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவுக்கு

ஐயா உங்கள் பேரப்பிள்ளைகள் ராஜன் ராஜாவின் பிள்ளைகள் நாங்கள் ஐயா எங்கள் மீது நீங்கள் காட்டிய பாசம் உங்கள் நல் இதயம் எல்லாம் உணர்ந்தவர்கள் நாம். எப்பொழுதும் எதையாவது பேரப் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்றே நினைப்பவர் நீங்கள்.

ஐயா உங்கள் மலர்ந்த முகத்தையும் புன்னகை தவழும் உதட்டையும் என்றுமே மறக்க முடியவில்லை. அதைப் பார்த்து நாமும் மகிழ்ந்தோம். எப்போதுமே எல்லா பிள்ளைகளையும் பேரர்களையும் காண்கின்றபோது ஆனந்தத்தால் கண்ணீர் மல்குவதை எம்மால் இன்னும் உணரமுடிகின்றது.

உங்கள் பிரிவை எண்ணி வருந்தும்
பேரப்பிள்ளைகள்
**கஜன், வினோதினி, நிவேதா,**
**கீர்த்தன், சிந்து.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மனதிலிருந்து.......

அன்னை போல் எமக்கிருந்து
அறிவுரைகள் சொன்னீர்கள்
எமக்கு இன்னல் வரும் போதெல்லாம்
இறைவனாய் நின்றீர்கள்
இடை நடுவே எம்மை விட்டு
ஏன் ஐயா சென்றீர்கள்?
முற்றத்தில் நீங்கள் இருந்தால்
முழு நிலா போலிருக்கும் - இன்று
முழுதான வெளிச்சம் இன்றி
இருளிலன்றோ வாழ்கின்றோம்
கண்டிப்பாய் இருந்தாலும்
கனிவான உங்களுள்ளம்
சிந்திக்க இடமின்றி எம் சிந்தை
கலங்குதைய்யா !
கணப் பொழுதும் கூட - உங்கள்
கண் எல்லைக்குள் நாமிருந்தோம்
இன்று நாம் கண் உறங்க முடியாது.
கனவெல்லாம் நீங்கள் தானே ஐயா!
உங்களின் நினைவு என்றும்
எங்களின் வாழ்வாய் நிற்கும்
எம் வாழ்க்கைப் பாதைதனில்
உம் காலின் தடமிருக்கும்
சிந்தையில் உங்கள் சொற்கள்
சிலை போல நிலைத்திருக்கும்
எந்நாளும் உங்கள் அன்பு
அழியாது எம் மனதில் வாழ
ஆண்டவனின் அடியில்
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும் ஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்

**வினோ - காண்டீபன், ஜேநிஷா - கபிஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவில்....

கள்ளமில்லா புன் சிரிப்பும்
களங்கமில்லாப் பேச்சும்
அன்பினிக்கப் பேசும் நீங்கள்
அரவணைக்கும் தென்றல்லோ !

கண்ணுக்குள் நிறைந்தவரே...!
காவியமாய் எம்முள் கலந்தவரே...!
உம் நினைவுக்குள் எமைப் பதித்தவரே ...!
தவிக்க விட்டு சென்றீர்களோ ஐயா ...!!!

யாரிடம் இதைச் சொல்வோம்
நாம் பிரிந்து பல நாட்கள் சென்றாலும்
மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே
எமைத் தேட விட்டுச் சென்றீர்களோ ஐயா ...!!!

எம் விரல்கள் தொடும் தூரம்
நீங்கள் இல்லை என்றாலும்
நாம் தொடுவோம் உங்களை
எம் இனிய நினைவுகளால் ஐயா ...!!!

ஆயிரம் உறவுகள் அணைத்திட இருந்தாலும்
ஐயாவே உமைப் போன்று அன்பு செய்ய
யாருமே இல்லையே என வாடுகின்றோம்
பேரப்பிள்ளைகள் நாங்கள் உமை எண்ணி ஐயா...!!!

உங்களை எண்ணி வாடும்
பேரப்பிள்ளைகள்
**ஜெனோ, சீலன், நிலக்ஷன், சஞ்ஜய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் சிந்துகின்றோம்

ஐயா என அழைத்த எம்
இதழ்கள் இப்போது ஊமையாகி விட்டன!

நிரப்ப முடியாத வெற்றிடத்தை
உருவாக்கி விட்டீர்கள் ஐயா ...!

என்ன விலை கொடுத்து
எமன் உம் உயிர் வாங்கினானோ
இறுதி மூச்சை எமன் தனக்கு
இரையார்கையில் என்ன நினைத்தீரோ?

ஒப்பாரி வைத்து ஓய்ந்துபோன உறவுகள்
கண்ணீர் சிந்தி காய்ந்துபோன பாசங்கள்
ஏங்கித் துடிக்கின்றன உம் நினைவுகளால்

வெம்மி அழுதாலும் வேதனையால்
துடித்தாலும் ஏழேழு ஜென்மங்கள்
எடுத்தாலும் எம் மகனாய்
பிறந்து மடியில் தவழும் ஐயா ....

பேரப்பிள்ளைகள்
றொஷான், ஜென்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளில் இருந்து ........

ஐயா என வாய் நிறைய அழைத்தோமே
உதடுகள் ஊமையாகி உணர்வின்றித்
துடிக்கிறது நெஞ்சம்
ஆறுதல் கூற யார் வருவார் ஓடோடி
வந்திடுங்கள் ஐயா
உங்கள் ஆசைமுகம் காண
ஒரு தடவை வாருமையா

மங்கல ஒளி வீச ஐயாவாக வாழ்ந்திருந்தீர்கள்
வீடே அமங்கலமாய் தோன்றுதையா
பார் போற்ற வாழ்ந்திட்ட ஐயாவே
பாதியிலே எம்மை பரிதவிக்க விட்டதேனோ
கண்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறதே
ஈடு செய்ய மீண்டும் வாறீர்களோ ஐயா
எப்பொழுதும் உங்களைக் காண
நெஞ்சம் துடிக்குதையா – உங்கள்
அன்பை எந்நாளும் எம் உள்ளம் மறவாது
ஒரு தடவை எமைக்காண
ஓடோடி வந்திடுங்கள் ஐயா

என்றும் அன்புடன்
பேரப்பிள்ளைகள்
**அலன், கபில், சுஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் நிறைந்தவரே!

உள்ளத்தில் வேர்விட்டு உதட்டில் விருட்சமாகும்
உங்கள் தனித்துவப் புன்னகை!!!!

அறிந்து பெயரிட்டது போல அற்புத மலர்
நாகலிங்கம்........

அமராவதியின் விடுதலைக்காய் அவதரித்தவன்
ஆற்றல்களின் களஞ்சியமானவன்!

போலீஸ் பயிற்சி முடித்தவுடன்
மணி மாமியைத் தூக்கிப் பார்த்துத்
துணையாக்கியவன்......

நான்கு செல்வங்களையும் மாமியோடும்
மாமி பிரிவின் பின்னும்
நலமே காத்த தாயுமானவன்

குறிவைத்தடித்தால் தென்னையும் சரியும்
இரும்புக் கலப்பையே இலகுவாய் தொங்கும்
ஆஜானுபாகுவான உங்கள் உடலுக்கும்
உள வலிக்கும் இப்படியொரு இடர் வருமா
எண்ண முடியவில்லை என் அருமை மாமனே.

நாற்பதுக்கும் அதிகம் மருமக்கள் நாம்
நீங்கள் எம் வீடு வரும்போதெல்லாம்
கையுட்டியிருக்கும், கண்மொழியும் அன்பிருக்கும்

என் உடல் அணுக்கள் ஒவ்வொன்றிலும்
உங்கள் உழைப்பும் கலந்திருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அருகில் உங்களோடு வளர்ந்தவன்
உங்களோடு உறங்கக் கிடைத்த இறுதி நாட்கள்

மாமா பிறப்பில் வாய்த்த சொந்தங்களில்
இறப்புவரை நாம் சிறப்புடன்
சுமக்கும் நினைவு
நாகலிங்கம் மாமா
நாகலிங்கம் மாமா

நெஞ்சங்கள் நெகிழக் கையசைக்கின்றேன்!
சென்று வாருங்கள் என் அருமை செல்வமே!

மருமகன் – லோகநாதன்.

## பாசம் நிறைந்த மாமாவே!

கலங்காத உள்ளத்துடன்
காலம் எல்லாம் வாழ்ந்திடுவீர்
பிள்ளைகள் அவர்தம் வளம்
பெருகிட பெருமை கொள்வீர்
சுற்றம் எல்லாம் கூடிக் குலாவி
குளிர்மையாகப் பேசிடுவீர்
வளங்கள் பல பெற்று வாழ்ந்திடுவீர்
என மனதார நினைந்து
பெருமை கொண்டிருந்தேன்
ஆனால் உமது
வாழ்வினைப் பொறுக்காத காலனவன்
உமது நல்லுள்ளம் கண்டு பொறாமையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கி எடுத்தானோ நாம் துயருற!
தலை நிமிர்ந்து பார்க்க முன்னர்
பொல்லாத நோய்வந்து உம்மைக்
கொண்டு சென்றதும் ஏனோ!

ஆளுக்கொரு தேதி வைத்து
ஆண்டவன் அழைப்பான் - இது நியதி
என்னும் மன ஆறுதலுடன் உங்களது
ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மருமகன்
R. சிறிகாந்த்

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா."

"நாம் இறந்த பின் எம்முடன்
காதற்ற ஊசியும் வருவதில்லை."







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்ணீர் அஞ்சலி
நேற்றுவரை உறவாடியவரே- ஐயா
இன்று விழிமூடி டபானது ஏன்
உங்கள் பிரிவு எம் வ்ழிகள் கலங்குதையா
நெஞ்சம் துடிக்குதையா- நீங்கள்
எமை விட்டு ஏன் சென்றீர்கள் ஐயா!
ஒரு முறை எம்மருகில் வாருங்கள் ஐயா.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
வைத்தியநாதன் யோகன் பேரமகன்
இல: 212 சிவசுந்தரம் வீதி சந்தையடி வட்டக்கச்சி
(அமரர் )
பசுபதி (பசர்) நாகலிங்கம்
மலர்வு
05-09-1935
உதிர்வு
26-02-2017
Karthik Studio


நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை
என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு”
குறள்
கண்ணீர் காணிக்கை
அன்பு அண்ணா ஞானத்தின் ஒளி விளக்காய் நிலையான வாழ்வினிலே நிலைத்து நின்று
நாடதனில் நனி சிறக்க வாழ்ந்தீர்கள்
நான்கு நற்செல்வங்களைப்பெற்று நலமுடனே நன்றாக வாழவைத்தீர்கள்
நாடறிந்த உமது புகழ் காலமெலாம் நிலைத்து நிற்கும்
காலங்கள் கடந்தாலும் உமது நினைவுகளுடன் என்றும் வாழும்
நெடுந்தீவு நடுக்குறிச்சி 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
இல:177 சிவசுந்தரம் வீதி வட்டக்கச்சி சந்தைபடியை வதிவிடமாகவும் கொண்ட
(அமரர்)
திரு. பசுபதி நாகலிங்கம்
மலர்வு
05~09~1935
உதிர்வு
26~02~2017
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
Karthik Studio


கண்ணீர் அஞ்சலி
நிலையான வாழ்விலே நிலைத்து நின்று
நினைவுகளை கனவாக்கி நீண்ட
தூரம் சென்றதென்ன-இனி
எங்கு காண்போம் உம் திருமுகத்தை
உம் பண்பான வார்த்தைகளை என்று
இனி நாம்கேட்போம் ஐயா ஆண்டுகள் கடந்தாலும்!
உம் பிரிவினை எம் நெஞ்சம் மறக்காது ஐயா!
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
(அமரர்)
பசுபதி (பசார்) நாகலிங்கம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
மலர்வு
05-09-1935
உதிர்வு
26-02-2017
Karthik Studio






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்ணீர் அஞ்சலி
கண்கள் பல உனைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ!
புன்னகை பூத்த பொன்முகம் மறைந்ததேனோ!
எம் கண்களெல்லாம் கடலாய் பொங்கிட - ஏன்
எம்மை கலங்கவிட்டு எங்கு நீர் சென்றீர் அப்பா?
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
(அமரர்)
பசுபதி (பசுற்)நாகலிங்கம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
மலர்வு
05-09-1935
உதிர்வு
26-02-2017
சின்னத்தம்பி நவம் பேரமகன்
இல: 194 பாண்டியன்குளம் நட்டாங்கண்டல்
Karthik Studio

# என்றென்றும் எங்கள்
# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் ..

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"

*எங்கள் அன்புத் தெய்வம்*


**அமரர் பசுபதி நாகலிங்கம்**

*அவர்களின் மரணச்செய்தி கேட்டு*
*எமது இல்லம் வந்து உதவிகள் செய்தவர்களுக்கும்,*
*துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், வெளியூர்களில்*
*இருந்து கலந்து கொண்டவர்களுக்கும்,*
*உள்ளூர், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி,*
*தந்தி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும்,*
*ஈமக் கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து*
*கொண்டோருக்கும், மேலும் பல வழிகளில் எமக்கு*
*உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்,*
*அந்தியேட்டிக் கிரியைகளிலும் இன்று நடைபெறும்*
*வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும்,*
*அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில்*
*கலந்து கொண்டோருக்கும், இம்மலரினை சிறப்புற*
*அச்சிட்டு உதவிய எவகிறீன் அச்சகத்தாருக்கும்*
*எமது மனமார்ந்த நன்றியைத்*
*தெரிவித்துக் கொள்கின்றோம்.*

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பசுபதி நாகலிங்கம் அவர்களின் குடும்ப விருட்சம்




* அமரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது,
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–

Evergreen
Printers
021 2210893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org